1970 ஆகஸ்ட் 27]

படுத்துதல் திட்டத்தின் 4 (1) பிரிவின் கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பு, 18—2—1970 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. 5-ஏ பிரிவின்படிக்கான விசாரணையை நடத்திய பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் அரசின் ஒப்புதலுக்காக வரைவு அறிவிப்புச் செயற்குறிப்புகளை அனுப்பியுள்ளார். 21—7—1970 நாளிட்ட 1907-ம் எண் அரசு ஆணையில், அவற்றிற்கு அரசு ஏற்பு அளித்துள்ளது. விரைவில் அவை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஹரிஜன மக்கள் வீட்டு மனைகள் வேண்டி மனுக்கள் போட்டாலும் வருடக் கணக்கில் அவர்கள் காத்துக்கொண்டிருக்கக்கூடிய அளவிற்கு ஒரு சூழ்நிலை உள்ளது. இதைத் தவிர்ப்பதற்காக வேண்டி யார் யாருக்கெல்லாம் வீட்டு மனைகள் தேவைப்படுகின்றனவோ, யார் யாருக்கெல்லாம் வீடு இல்லையோ அதுபற்றி அறிந்துகொள்ள ஒவ்வொரு ஹரிஜனக் காலனிக்கும் நேரடியாகச் சென்று அதைப் பரிசோதனைசெய்து அந்த அடிப்படையில் வீட்டு மனைகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு மனைகள் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் முடிவு எடுத்து அந்த வகைப்படி செயலாற்றிக்கொண்டு வருகிறது. ஏறத்தாழ 1½ லட்சம் பேர்களுக்கு இதுவரையில் வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் மூன்றில் ஒரு பங்கு ஹரிஜன மக்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சில ஹரிஜன மக்கள் அவர்கள் வாழ்கிற பகுதியிலேயே இடம் வேண்டுமென்று கேட்கிறார்கள், அந்த இடங்கள் தனியார்களுக்குச் சொந்தமான பட்டா நிலங்களாக இருக்கின்றன. பட்டா நிலங்களை கையகப்படுத்த வேண்டுமென்றால் அதற்குப் பல படிகளைத் தாண்ட வேண்டியிருக்கிறது. எனவே காலதாமதமாகிறது.

அரிசனங்களுக்கு வீடு கட்ட மான்யம்.

*** 70 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆதி திராவிட மக்களுக்குக் கடனும் மான்யமும் வழங்கி வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆதி திராவிட மக்களுக்குக் கடனும் மான்யமும் வழங்கி வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் நடைமுறையிலேயே உள்ளது. 9.30 a.m.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : ஹரிஜனங்களுக்கு என்று தனிப்பட்டு ஒதுக்கப்பட்ட பகுதியில் மனை கொடுக்காமல் மற்ற சமூக மக்களோடு அவர்கள் சேர்ந்து வாழ்வதன்மூலம், இருக்கிற கீழான நிலைமை மாறுவதற்குரிய வகையில் புதிய காலனிகள்

அமைக்கும்போது ஹரிஜனங்களுக்கு என்று ஒதுக்குவது இல்லாமல், மற்றவர்களுக்கு மத்தியில் வீடு கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா? மனை கொடுக்காவிட்டால் அரசு வீடு கட்டிக் கொடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கருத்து மிகச் சுவையாக இருக்கிறது. செயலில் கசப்புகள் ஏராளம் ஏற்படுகின்றன. அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டால் செயல் படுத்தும்போது கஷ்டமாக இருக்கிறது. ஹரிஜன மக்களும் தனியாக இருக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்கு அரசு மனை வாங்கி ஒதுக்கி இருந்தாலும் கூட வீடு கட்டுவதற்கு அவர்களுக்குப் பணம் இல்லாத காரணத்தால் பல இடங்களில் இடம் சும்மா கிடக்கிறது. அப்படி வீடு கட்டுவதற்கு அவர்களுக்கு ஏதாவது அரசு கடனோ மானியமோ கொடுத்து உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அடுத்த கேள்வி அதைப் பொறுத்து இருக்கிறது. அப்போது பதில் சொல்கிறேன்.

திரு. மு. முத்தையா : ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்கு புறம்போக்கு நிலத்தைப் பட்டா கேட்டால் சீக்கிரம் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். அதே நேரத்தில் தமிழ்நாடு போக்குவரத்துத் துறையிலுள்ள புள்ளி விவர ஆபீசர் திரு. நஞ்சையன் என்ற கெஜடட் ஆபீசருடைய மனைவிக்கு 5 ஏக்கர் புறம்போக்கு நிலமும், புள்ளிவிவர இலாக்காவில் உள்ள அஸிஸ்டெண்ட் டைரக்டர் மாசிலாமணி என்ற கெஜடட் ஆபீசருக்கு 5 ஏக்கர் பட்டா பொன்னேரி தாலுகா மாதர்பாக்கம் என்ற இடத்தில் கொடுத்து இருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கேள்வி நேரத்தில் பல புகார்கள் கிளப்புவது பொருத்தமாகாது. அதை எழுதிக் கொடுத்தால் அரசாங்கம் பரிசிலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. சோ. கருணைநாதன் : வீடு கட்டுவதற்குத் தருகிற கடன் வட்டி இல்லாத கடனா? அதைத் திரும்ப எப்படி அரசு வசூலிக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : வீடு கட்டத் தரப்படுகிற கடன் 100 மாதத் தவணையில் வசூலிக்கப்படுகிறது.

திரு. எம். பூபதி : தலைவரவர்களே, மத்திய அரசு ஹரிஜன மக்களுக்கு இலவசமாக உதவி நிதியும், அதே சமயத்தில் சிறிய கடன் தொகை கொடுக்கிற திட்டம் இருக்கிறதே, இந்தத் திட்டத்தை நம்முடைய மாநில அரசு பயன்படுத்துகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1970 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து மத்திய அரசு ஒட்டுமொத்தமாக எல்லாத் திட்டங்களுக்கும் என்று இவ்வளவு காலம் கொடுக்கவில்லை. கடந்த ஆண்டிலேதான் அப்படிக் கொடுக்கிறார்கள். நிலம் விடு கட்டுவதற்கு என்று தனியாக மத்திய அரசாங்கம் இப்போது நிதி எதுவும் ஒதுக்க வில்லை. மத்திய அரசாங்கம் ஹரிஜனங்களுக்கு வீடுகளை இன்ன வகையில் கட்ட வேண்டுமென்று ஒரு திட்டம் தந்து இருக்கிறது. ரூ. 5,000 செலவில் ஒரு தனி வீடாகக் கட்டுவதற்குத் திட்டம் போட்டு வீடு கட்டுகிறது. அதற்கு ஒப்புதல் State Housing Board, Chief Engineer (Buildings) இருவரும் ஒப்புதல் கொடுக்கிற அளவுக்கு ஒரு புதிய டிசைன் வேண்டும். அதை ஒப்புக்கொண்ட பிறகு ரூ. 5,000 அவர்களுக்கு கொடுக்கப்படும். அதற்காக ஒப்புதல் பெற்று அனுப்பவேண்டுமென்று கேட்கிறார்கள். அந்த வகையில் State Housing Board, Chief Engineer (Buildings) 220 சதுர அடி ரூ. 3,400-ல் ஒரு வீடும், 320 சதுர அடி ரூ. 4,500-ல் ஒரு வீடுமாக இரண்டு திட்டங்கள் கொடுத்து இருக்கிறார்கள். அவைகள் இன்று நல்த்துறை இயக்குநரின் பரிசீலனையில் இருக் கிறது. பிறகுதான் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். மத்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டால் இந்தத் திட்டத்தின்கீழ் மத்திய அரசாங்கம் மான்யத்தோடு வீடு கட்ட லாம்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : ஹரிஜனங்களுக்கு ஒரு வீடு கட்டக் கடன் எவ்வளவு, மான்யம் எவ்வளவு? அதைக் கட்டிக் கொடுக்க அரசு ஏதேனும் கடன் தருகிறதா? அப்படிக் கொடுக்கிற பணத்திற்கு வட்டி உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாண்பு மிகு உறுப்பினர் அவர்களிடம் பணம் இருந்தால் கொடுக்கலாம். அரசு அதை வரவேற்கும். ஆனால் ரூ. 910 என்ற மதிப்பீட்டில் ஒரு வீடு. அதில் ரூ. 250 அவர்களுக்குக் கடனைக் கொடுக்கப்படும். மிஞ்சிய பணம் மான்யமாகத் தரப்படும். அந்த ரூ. 250 ஐ 100 சமத் தவணைகளில் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும். வட்டி கிடையாது.

கோவை வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் கண்டு பிடிக்கப்பட்ட புதுவகை நெல்.

*71வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமீபத்தில் கோவை விவசாய ஆராய்ச்சிப் பண்ணை யில் (Agriculture Farm) கண்டு பிடிக்கப்பட்ட புதுவகை நெல் யாது ?

(இ) அதற்கு என்ன பெயரிடப்பட்டுள்ளது?